# தூதன்

தூதன் 35 | செப்டம்பர் 2026 | தூது 8

“கோபத்தை விட்டுவிட்டு, உக்கிரத்தைத் துறந்துவிடு; பொல்லாப்புசெய்ய ஏதுவான கோபம் உனக்கு வேண்டாம்.” சங்கீதம் 37:8




தென்னிந்தியத் திருச்சபை - தமிழ் சபை - துபாய்

# Summer Camp 2026



















# தென்னிந்தியத் திருச்சபை
## தமிழ் சபை - துபாய்


சபை போதகர் மடல் 01

ஆயரம்மா மடல் 05

ஃபுஜைரா போதகர் மடல் 07

ஆயரம்மா மடல் - ஃபுஜைரா 10

இராஸ் அல் கைமா - போதகர் மடல் 13

ஆயரம்மா மடல் - இராஸ் அல் கைமா 15

செயலர் மடல் 18

நீங்கள் கிறிஸ்தவரா! 21

திருச்சபை ஜெபநாள் 22

வேதவினா போட்டி 25

தெரிந்துகொள்வோம் 28

Health Tips 30

தமிழ் வேதவகுப்பு - சிறுவர் பகுதி 32

Children’s Corner 33

Birthday Celebrants 37

Wedding Anniversary 41

Asahel 43



P.O.Box: 8785, Dubai. Mob: 050-5533645

Email: office@csitamilparishdubai.com - Website: www.csitamilparishdubai.com

# சபை போதகர் மடல்

அன்பானவர்களே!

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் திருச்சபை மக்கள் யாவருக்கும் எனது அன்பான நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். சபை ஊழியங்களை நிறைவாகச் செய்துவரும் ஃபுஜைரா, மற்றும் இராஸ் அல் கைமா போதகர்கள், நிர்வாகஸ்தர்கள் மற்றும் EC அங்கத்தினர்கள் அனைவரையும் அன்புடன் வாழ்த்துகிறேன். விடுமுறைக்காக சொந்த ஊர்களுக்குச் சென்று வந்த குடும்பங்களுக்காகவும், பிரயாணங்களில் ஆண்டவர் தந்த பாதுகாப்பிற்காகவும் ஆண்டவருக்கு நன்றி செலுத்துகிறேன்.

கடந்த ஜூலை மற்றும் ஆகஸ்டு மாதங்களில் ஆண்டவர் நம்மை ஆசீர்வதித்து கோடை நாட்களிலும் பாதுகாத்து வழி நடத்தினார். யுத்தங்களுக்கும் விலக்கி நம்மைக் காத்தார். கடந்த மாதங்களில் ஊழியங்களையும் கர்த்தர் ஆசீர்வதித்து வழி நடத்தினார். குறிப்பாக, இராஸ் அல் கைமா மற்றும் துபாய் சபைகளில் Summer Camp சிறப்பாக நடைபெற ஆண்டவர் உதவி செய்தார். ஊழியங்களை உண்மையாய் செய்துவரும் Ministry Leaders அனைவருக்கும் நன்றி கூறுகிறேன்.

இவ்வருடத்தின் ஒன்பதாவது மாதத்தைக் காண ஆண்டவர் அருளிய கிருபைகளுக்காக கர்த்தருக்கு ஸ்தோத்திரம். இம்மாதத்தில் ஆசிரியர் ஞாயிறு, முதியோர் ஞாயிறு மற்றும் தென்னிந்திய திருச்சபை தோன்றிய தினம் ஆகிய சிறப்பு நாட்களை நாம் ஆசரிக்கிறோம். அனைத்து சிறப்பு ஆராதனைகளையும் சபையின் ஊழியங்களையும் ஆண்டவர் ஆசீர்வதித்து வழி நடத்துவாராக. Harvest Festival ஆயத்தங்கள் ஆசீர்வாதமாக அமையவும் ஜெபம் செய்வோம். ஆண்டவர் இப்புதிய மாதம் நம் அனைவருக்கும் ஆசீர்வாதமாக அமைய கிருபை செய்வாராக. இம்மாதத்திற்கான வாக்குத்தத்த வசனத்தைத் தியானிப்போம்.

**“அவர் உன் எல்லைகளை சமாதானமுள்ளவைகளாக்கி, உச்சிதமான கோதுமையினால் உன்னைத் திருப்பதியாக்குகிறார்.” சங்கீதம் 147:14**

"He grants peace to your borders and satisfies you with the finest of wheat." Psalm 147:14

அன்பானவர்களே, ஒரு பள்ளியின் இரண்டு மாணவர்கள் ஒருநாள் இரவு நேரத்திலே மூன்று பசு மாடுகளை பிடித்து வந்து பள்ளி வளாகத்திலே விளையாட்டாக விடுகின்றனர். விடும் போது முதல் மாட்டின் மீது 1 என்றும், இரண்டாவது மாட்டின் மீது 2 என்றும் மூன்றாவது மாட்டின் மீது 4 என்றும் எழுதி விடுகின்றனர். மறுநாள் காலையிலே எல்லாரும் வந்து பார்த்த போது வளாகம் முழுவதும் ஆங்காங்கே மாட்டுச் சாணமாக உள்ளது. தலைமை ஆசிரியர் எல்லாரையும் கூடிவரச்செய்து மாடுகளைப் பிடிக்கச் சொல்கிறார். ஒரு மாடு சமையல் கூடம் அருகிலும், ஒரு மாடு லேப் அருகிலும் மற்றொரு மாடு கார் பார்க்கிங் அருகிலும் பிடிபடுகிறது. இப்பொழுது மாடுகளைப் பார்க்கிறார்கள். ஒன்று, இரண்டு, நான்கு என்று எழுதப்பட்டுள்ளது. மூன்றாவது மாடு எங்கே என்ற கேள்வி எல்லாருக்குள்ளும் எழுகிறது. திரும்பவும் தேட ஆரம்பிக்கிறார்கள். பள்ளிக்கு லீவு விட்டும் தேடிப்பார்த்தார்கள். கிடைக்கவில்லை. ஏனென்றால், விடப்பட்டது மூன்று மாடுகள்தானே!

ஆம். அன்பானவர்களே, நாமும் நம்முடைய வாழ்விலே தேவையற்றவைகளையோ அல்லது இல்லாதவைகளையோ தேடித் தேடி வாழ்வை வீணடித்துக் கொண்டிருக்கிறோம். நாம் சந்தோஷமாக வாழ எவ்வளவு இருந்தாலும் இன்னும் கொஞ்சம் அதிகமாக வேண்டும் என நினைக்கிறோம். பணம், பதவி, அழகு, அதிகாரம், அங்கீகாரம் என பலவற்றைச் சொல்லலாம். மற்றவர்களோடு நம்மை ஒப்பிட்டுப்பார்த்து அவர்களைப் போல வாழ அல்லது அவர்களைத் தாண்டி மேலே செல்ல ஆசைப்படுகிறோம். இதனால் எப்பொழுதுமே திருப்தியற்றவர்களாகவே காணப்படுகிறோம். ஆனால், வேதம் திருப்தியான ஒரு வாழ்வுக்கு வழி சொல்லுகிறது. ஆண்டவர் நம்மை திருப்திப்படுத்துவதாக வாக்கு கொடுக்கிறார். தியான வசனம் சொல்கிறது - “அவர் உன் எல்லைகளை சமாதானமுள்ளவைகளாக்கி, உச்சிதமான கோதுமையினால் உன்னைத் திருப்பதியாக்குகிறார்.” சங்கீதம் 147:14. நாம் திருப்தியடைய என்ன செய்ய வேண்டும்?

முதலாவது..

### 1. ஆண்டவர் அருளுவதில் திருப்தியாயிருங்கள்.

### Be Content in God's Provision.

“உச்சிதமான கோதுமையினால் உன்னைத் திருப்பதியாக்குகிறார்.” சங்கீதம் 147:14.

நாம் பெற்றுக்கொள்வது அனைத்துமே ஆண்டவரிடமிருந்து வருகிறது என்ற உண்மையை புரிந்துகொள்ளும் போது மட்டுமே நமக்கு திருப்தி ஏற்படும். சங்கீதம் 147-ல் சங்கீதக்காரர் இறைவனுடைய வல்லமையையும் இயற்கையை கட்டுப்படுத்தும் இறைவனின் ஆற்றலையும் விவரிக்கிறார். அவ்வளவு வல்லமை படைத்த ஆண்டவர்

நம்மை உச்சிதமான கோதுமையினால் நம்மை திருப்தியாக்குகிறார் என நம்பிக்கையை வெளிப்படுத்துகிறார். சங்கீதம் 23: 1 ல் தாவீது அரசர் தாம் மிகப்பெரிய ராஜாவாக இருந்த போதிலும் "கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார், நான் தாழ்ச்சியடையேன்" என்று தன்னை போஷிப்பவரும், பராமரிப்பவரும், வழி நடத்துபவரும் ஆண்டவரே என்று அறிக்கை செய்கிறார். உபாகமம் 8-ம் அதிகாரத்தில் 17-ம் வசனத்தில் "என் சாமர்த்தியமும் என் கைப்பெலனும் இந்த ஐசுவரியத்தை எனக்குச் சம்பாதித்தது என்று நீ உன் இருதயத்தில் சொல்லிக்கொள்ளாமலும் இருக்க எச்சரிக்கையாயிரு" என்று எச்சரிக்கிறார். எனவே, முதலாவது ஆண்டவர் நமக்கு என்னவெல்லாம் தந்துள்ளார் என்பதை எண்ணிப்பார்ப்போம். நாம் பெற்றுள்ளது அனைத்துமே ஆண்டவர் அருளியிருக்கும் நன்மைகளே என்பதை புரிந்து கொள்வோம்.

இரண்டாவது..

**2. தேவைகளில் ஆண்டவரையே சார்ந்திருங்கள்.**

**Trust God in Times of Needs**

"என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்." பிலி. 4:19

திருப்தியாயிருப்பது என்பது தேவைகளே இல்லாத வாழ்க்கை அல்ல. எல்லாருக்கும் தேவைகள் உண்டு. ஆனால் அந்த தேவைகளை சந்திக்க ஆண்டவர் வல்லவர் என்று அவரை சார்ந்திருக்கும் அனுபவமே நமக்கு திருப்தியைத் தரும். பவுல் அப்போஸ்தலர் பிலிப்பியருக்கு எழுதும் போது குறைவை அதாவது தேவைகளை (Needs) ஆண்டவர் நிறைவாக மாற்றுவார் என்று நம்பிக்கையை வெளிப்படுத்துகிறார். ஆண்டவர் நம் ஆசைகளையெல்லாம் அல்ல நிச்சயமாக நம்முடைய தேவைகளை அறிந்து நிறைவேற்றுபவர். எனவே, தேவைகளை நினைத்து கவலைப்படுவதை விட்டு விட்டு தேவைகளில் ஆண்டவரை சார்ந்திருக்கவும், பயப்படுவதை விட்டுவிட்டு ஜெபிக்கவும் நாம் அழைக்கப்படுகிறோம். எபிரேயர் 13:5ல் "நீங்கள் பண ஆசையில்லாதவர்களாய் நடந்து, உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணுங்கள். நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை உன்னைக் கைவிடுவதுமில்லை என்று அவர் சொல்லியிருக்கிறாரே" என்று கூறப்பட்டுள்ளது. ஆண்டவர் நம்மோடு இருக்கிறார். அவர் பார்த்துக்கொள்வார் என்று நம்பிக்கையை அவர் மீது வைப்போம்.

மூன்றாவது...

### 3. ஆண்டவருக்கு நன்றி செலுத்துவோம்.

### Give Thanks to God in All Circumstances.

“நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன், என் இரட்சிப்பின் தேவனுக்குள் களிகூறுவேன்.” ஆபகூக் 3:18

நமது அனைத்து சூழ்நிலைகளிலும் ஆண்டவருக்கு நன்றி செலுத்துவது நமது திருப்தியை காண்பிக்கிறது. ஆபகூக் தீர்க்கதரிசி சொல்லும் போது அத்திமரம் துளிர்விடாமல் போனாலும், திராட்சை செடிகளில் பழம் உண்டாகாமற் போனாலும்... நான் மகிழ்ச்சியாயிருப்பேன் என்று கூறுகிறார். ஏனென்றால் மகிழ்ச்சியாயிருப்பது நாம் பெறும் பொருளைப் பொருத்தது அல்ல. அதைத் தரும் ஆண்டவர் சார்ந்தது. 2 இராஜா. 4-ஆம் அதிகாரத்தில் சூனேம் ஊரைச் சார்ந்த கனம் பொருந்திய ஸ்திரியினிடத்தில் உனக்கு நான் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டபோது அவளுக்கு குழந்தையில்லாத சூழ்நிலையிலும் அவள் “என் ஜனத்தின் நடுவே நான் சுகமாய்க் குடியிருக்கிறேன்” என்று சொல்கிறாள். அதுபோன்று நம் வாழ்விலும் நாம் பெற்றிருக்கும் நன்மைகளுக்கு நன்றியுடனிருக்க நாம் அழைக்கப்படுகிறோம்.

ஆம். அன்பானவர்களே, நம்முடைய ஆண்டவர் நமக்கு நன்மையானவைகளைத் தந்து நம்மை திருப்திப்படுத்தும் ஆண்டவர். நாம் பெற்றுள்ள நன்மைகள் அனைத்தும் ஆண்டவர் அருளுபவைகளே. ஆகவே, நமக்கு ஆண்டவர் தந்துள்ள நன்மைகளுக்குாக நன்றி செலுத்துவோம். நமது தேவைகளிலும், சூழ்நிலைகளிலும் ஆண்டவரையே சார்ந்திருப்போம். நிச்சயமாகவே ஆண்டவர் நம்மை ஆசீர்வதித்து நடத்துவார். ஆமென்.

கிறிஸ்துவின் பணியில்
அருட்திரு. K.சுதாகர்.
சபை போதகர்/தலைவர்.

## ஜுலை 2026 தமிழ் வேதவகுப்பு சரியான பதில் எழுதியவர்கள்

1. Ashmi Shalom *****
2. Antrina Jessica *****
3. Jeslin Shifani *****
4. Bernice Bila Paul *****
5. Jessica Magdalene *****
6. Jervin Jeba Robert Jefferson *****
7. Diwan Pohle *****
8. P. Rijo Jeyan
9. P. Lijo Sam
10. Jaden Rodney
11. Anto Jaiden
12. Kevin Thomas
13. Rafael Vijay
14. Jerioth Stephen
15. Jonath Stephen

***** அழகான கையெழுத்திற்கான பாராட்டு - மிகவும் நன்றாக எழுதியுள்ளீர்கள்! 👏🌟

## இயேசுவிடம் நன்மை பெற்ற இல்லத்தரசிகள் - அக்சாள்

(யோசுவா 15:16-19, நியாயாதிபதிகள் 1:12-15)

தேவனுடைய வார்த்தையில் நமக்கு அறிமுகமாகும் பல பெண்மணிகளில் அக்சாள் என்ற பெயர் அதிகம் பேசப்படாவிட்டாலும், அவளுடைய வாழ்க்கை நமக்கு ஆழமான ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைத் தருகிறது. காலேப் என்னும் விசுவாசமுள்ள தலைவனின் மகளாகிய அக்சாள் தன் தகப்பனிடமும், தேவனிடமும் தைரியமாகக் கேட்டு, முழு ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்ட ஒரு பெண்ணாக நமக்குக் காட்டப்படுகிறாள். இந்த சிறிய வேதப் பகுதியின் வழியாக தேவன் நமக்குத் தர விரும்பும் நிறைவான ஆசீர்வாதத்தை நாமும் எப்படிப் பெற்றுக் கொள்ளலாம் என்பதைச் சிந்திப்போம்.

### அக்சாள் யார்?

அக்சாள் என்றால் “காலணி” அல்லது “அணிகலன்” என்று பொருள். அவள் காலேபின் மகள். காலேப் என்பவன் கானான் தேசத்தை வேவு பார்க்க அனுப்பப்பட்ட பன்னிரண்டு பேரில் ஒருவன் யோசுவாவைப் போலவே முழு இருதயத்தோடு கர்த்தரைப் பின்பற்றியவன். தன் மகள் அக்சாளை மணம் செய்துகொடுக்க “கீரியாத்செப்பேரைத் தாக்கிப் பிடிக்கிறவனுக்கு என் மகள் அக்சாளை மனைவியாகக் கொடுப்பேன்” என்று காலேப் ஒரு வாக்குத்தத்தத்தை வைத்தான். காலேபின் இளைய சகோதரனாகிய கேனாசின் மகன் ஒத்னியேல் அந்த பட்டணத்தைப் பிடித்து அக்சாளை மனைவியாகப் பெற்றுக்கொண்டான்.

### 1. நன்மையானதைக் கேட்டாள்.

அக்சாள் தன் கணவனிடம் அனுமதி கேட்டு தன் தகப்பனிடம் ஒரு வயலைக் கேட்டாள். அவள் கழுதையின்மேல் இருந்து இறங்கியபோது காலேப் “உனக்கு என்ன வேண்டும்?” என்று கேட்டான். அப்பொழுது அவள் “எனக்கு ஒரு ஆசீர்வாதம் தாரும் தென்தேசத்தில் என்னைக் குடியிருக்கவைத்தீரே நீரூற்றுகளையும் எனக்குத் தாரும்” என்று கேட்டாள். காலேப் மேல் நீரூற்றுகளையும் கீழ் நீரூற்றுகளையும் அவளுக்குக் கொடுத்தான். வெறும் நிலத்தோடு அக்சாள் திருப்தியடையவில்லை. அந்த நிலம் பயனுள்ளதாக இருக்க வேண்டுமானால் தண்ணீரும் தேவை என்பதை அவள் அறிந்திருந்தாள். ஆகவே அவள் தைரியமாகக் கேட்டாள், தன் தகப்பனும் மனமுவந்து கொடுத்தான்.

2. நிறைவானதைக் கேட்டாள்.

தேவன் நமக்குக் கொடுக்கும் ஆசீர்வாதங்களில் நாமும் பலமுறை பாதியிலேயே நிறுத்திக்கொள்கிறோம். நிலத்தைப் பெற்றால் போதும் என்று நினைத்துவிடுகிறோம் ஆனால் அந்த நிலத்தை உயிர்ப்புள்ளதாக்கும் நீரூற்று - அதாவது பரிசுத்த ஆவியானவரின் நிறைவு - இல்லாமல் அந்த ஆசீர்வாதம் பயனற்றதாகிவிடும். அக்சாள் நமக்குக் கற்றுத்தரும் காரியம் இதுவே: வெறும் வாக்குத்தத்தத்தைப் பெற்றுக்கொள்வதோடு நின்றுவிடாமல் அதை முழுமையாக அனுபவிக்கத் தேவையான கிருபையையும் கேட்டுப் பெற வேண்டும். "கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்" என்று கர்த்தர் நமக்குச் சொல்லியிருக்கிறார் (மத்தேயு 7:7). நாமும் தேவனிடத்தில் தைரியமாக அணுகி முழு ஆசீர்வாதத்தைக் கேட்கக் கற்றுக்கொள்ள வேண்டும்.

3. நம்பிக்கை தருகிறாள்.

அக்சாளின் வாழ்க்கை நமக்குக் காண்பிக்கும் மற்றொரு உண்மை என்னவென்றால், தேவனுடைய ஊழியத்தில் உண்மையாய் நிலைத்திருந்தவர்களின் சந்ததியார் ஆசீர்வதிக்கப்படுகிறார்கள் என்பதே. காலேப் தன் வாழ்நாள் முழுவதும் கர்த்தரைப் பின்பற்றியதால், அவனுடைய குடும்பமும் அதே ஆசீர்வாதத்தில் பங்கடைந்தது. அக்சாளும் ஒத்னியேலும் இணைந்து தேவனுடைய ராஜ்யத்தை முன்னெடுத்துச் சென்றனர். பிற்காலத்தில் ஒத்னியேல் இஸ்ரவேலின் முதல் நியாயாதிபதியாக எழுப்பப்பட்டான் (நியாயாதிபதிகள் 3:9-11). ஒரு தலைமுறையின் விசுவாசம் அடுத்த தலைமுறைக்கு ஆசீர்வாதமாகவும் தேவனுக்கென்று பயன்படும் ஊழியர்களை உருவாக்கும் அஸ்திபாரமாகவும் மாறுகிறது.

தேவன் எப்பொழுதும் நமக்கு நிறைவான ஆசீர்வாதத்தையே அருள விரும்புகிறார். அக்சாளுடைய வாழ்க்கை நமக்குக் கற்பிப்பது இதுவே - வெறும் நிலத்தோடு நிறுத்திக்கொள்ளாமல், நீரூற்றையும் தேடும் தைரியம் நமக்கு வேண்டும். நம் ஜீவியத்தில் தேவன் திறந்துவைத்திருக்கும் ஆசீர்வாதங்களை முழுமையாகப் பெற்றுக்கொள்ள விசுவாசத்தோடும் தைரியத்தோடும் அவரிடத்தில் கேட்போம். காலேப் தன் மகளின் விண்ணப்பத்தைக் கேட்டு மனமுவந்து கொடுத்ததுபோல நம்முடைய பரம பிதாவும் நம் விண்ணப்பங்களைக் கேட்டு தம் நல்ல ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை நம்மேல் பொழிய ஆயத்தமாய் இருக்கிறார்.

"கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்" - மத்தேயு 7:7

கிறிஸ்துவின் பணியில்
திருமதி. ஸ்மைலி சுதாகர்
ஆயரம்மா, துபாய்.

## கற்போம் கிரேக்கம் - 18

### Σ - Sigma | Sophia - ஞானம்

கிரேக்க மொழியின் பதினேழாவது எழுத்து Sigma (Σ, σ) - ஆங்கில S/s-க்கு ஈடானது. Sophia (சோ.ஃ.பியா) என்பது "ஞானம்" என்று பொருள்.

இன்றைய உலகில் ஞானம் என்பது புத்திசாலித்தனம் அல்லது அனுபவத்தால் கிடைக்கும் விவேகம் என்று கருதப்படுகிறது. ஆனால் வேதாகமத்தில் ஞானம் வெறும் அறிவல்ல அது தேவனுடைய ஆழமான உண்மையையும், இறுதியில் கிறிஸ்துவையே சுட்டிக்காட்டும் வெளிப்பாட்டையும் குறிக்கிறது.

#### 1. பழைய ஏற்பாட்டில் ஞானம்

நீதிமொழிகள் 8-ஆம் அதிகாரத்தில், உலகம் படைக்கப்படுவதற்கு முன்பே ஞானம் தேவனுடன் இருந்ததாகவும், அவருடைய கிரியையில் மகிழ்ந்ததாகவும் சித்தரிக்கப்படுகிறது (நீதி. 8:22-23). ஞானம் ஒரு தனித் தெய்வம் என்று அல்ல் தேவனுடைய ஞானம் படைப்புடனும் மனிதர்களுடனும் எவ்வளவு நெருக்கமாகச் செயல்படுகிறது என்பதை வெளிப்படுத்தும் கவித்துவமான சித்திரம்.

சீராக்கின் ஞானம் 24-ல் ஞானம் இஸ்ரவேலில் தன் கூடாரத்தை அமைக்க வந்ததாகக் கூறப்படுகிறது. சாலொமோனின் ஞானம் 7-9ல் ஞானம் "தேவனுடைய வல்லமையின் சுவாசம்", "நித்திய ஒளியின் தூய பிரதிபலிப்பு" என விவரிக்கப்படுகிறது.

#### 2. புதிய ஏற்பாட்டில் ஞானம்

புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் இயேசுவை விளக்கும்போது, பழைய ஞானப் பாரம்பரியத்தின் மொழியை புதிய வெளிச்சத்தில் பயன்படுத்துகின்றனர்.

யோவானின் நோக்கு - வார்த்தையாகிய ஞானம்:
"ஆதியிலே வார்த்தை இருந்தது... அந்த வார்த்தை தேவனாயிருந்தது... அந்த வார்த்தை மாம்சமாகி நமக்குள்ளே வாசம்பண்ணிற்று" (யோவான் 1:1,14). நித்தியமான வார்த்தை மனிதர் மத்தியில் வாசம்பண்ண வந்தது.

நற்செய்திகளின் நோக்கு - ஞானத்தின் பிள்ளைகள்:
இயேசு, ஞானத்தின் நிரூபணமாக தன்னை முன்வைக்கிறார்: “ஞானமானது தன் பிள்ளைகளால் நீதியுள்ளதென்று விளங்கும்” (மத். 11:19 லூக். 7:35). இரட்சிப்பின் வரலாற்றில் தேவனுடைய ஞானம் செயல்படுகிறது.

இந்தப் பார்வைகள் அனைத்தும் நித்தியமான ஞானம் இன்று ஒரு முகத்தையும் ஒரு நாமத்தையும் கொண்டிருக்கிறது என்பதைச் சுட்டுகின்றன - நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து.

### 3. சபை ஆராதனையிலும் பாரம்பரியத்திலும் ஞானம்

திருச்சபை இந்த உண்மையை நூற்றாண்டுகளாக ஆராதனையிலும் வாழ்விலும் வெளிப்படுத்தி வந்துள்ளது.

கிழக்கு ஆர்த்தடாக்ஸ் ஆராதனையில் சுவிசேஷ வாசிப்பிற்கு முன்பாக “ஞானம்! கவனமாயிருப்போம்!” (Sophia! Orthoi!) என்று அழைக்கப்படுகிறது. இது தேவனுடைய வார்த்தையை முழு கவனத்துடன் கேட்க சபையினரை அழைக்கும் பண்டைய வழக்கம்.

ஹாகியா சோ.்.பியா:
கொன்ஸ்டான்திநோப்பிளின் புகழ்பெற்ற ஆலயமான ஹாகியா சோ.்.பியா (“பரிசுத்த ஞானம்”) ஒரு துறவியின் பெயர் அல்ல் கிறிஸ்துவையே தேவனுடைய ஞானம் என்று அர்ப்பணித்து கட்டப்பட்ட ஆலயம்.

“O Sapientia” பிரார்த்தனை:
மேற்கத்திய சபையின் யுனஎநவெ காலத்தில் “ஓ ஞானமே” என்ற பண்டைய பிரார்த்தனை பாடப்படுகிறது. கிறிஸ்துவை நோக்கி, வந்து எங்களுக்கு விவேகத்தின் வழியைப் போதிக்குமாறு வேண்டப்படுகிறது.

### 4. அன்றாட வாழ்வில் ஞானத்தைத் தேடுதல்

1. ஜெபத்தில் ஞானத்தைக் கேட்டல் (Prayer):
ஞானம் நம் சொந்த முயற்சியால் மட்டும் கிடைப்பதல்ல் தேவனிடமிருந்து கேட்டு பெறும் வரம். சிறியதோ பெரியதோ ஒவ்வொரு முடிவிலும் தேவனுடைய வழிநடத்துதலை ஜெபத்தில் தேட வேண்டும்.

2. வேதவசனத்தில் தியானித்தல் (Meditating on Scripture):
“கர்த்தருடைய வேதம் பரிபூரணமுள்ளது... பேதையை ஞானியாக்கும்” (சங். 19:7). தேவனுடைய வார்த்தையே ஞானத்தின் ஊற்று. தினமும் வாசித்து, தியானித்து, வாழ்க்கையில் நடைமுறைப்படுத்த வேண்டும். இது தகவல் சேகரிப்பல்ல, உள்ளத்தை மாற்றும் ஆவிக்குரிய பயிற்சி.

### 3. தாழ்மையுடன் நடத்தல் (Humility):

உன்னதத்திலிருந்து வரும் ஞானத்தின் அடையாளங்களை யாக்கோபு விவரிக்கிறார்: "முதலாவது சுத்தமும், பின்பு சமாதானமும், சாந்தமும், இணங்கிநடக்கிறதுமும், இரக்கத்தினாலும் நற்கனிகளினாலும் நிறைந்ததும், பட்சபாதமில்லாததும், மாயமில்லாததுமாயிருக்கும்" (யாக்கோபு 3:17).

மெய்யான ஞானம் ஒருபோதும் பெருமையாகவோ, மற்றவர்களைத் தாழ்த்திப் பேசுவதாகவோ செயல்படாது. குடும்பத்திலும், பணியிடத்திலும், சபையிலும், நம் ஞானத்தை வாதத்தினாலோ சுயநீதியினாலோ அல்ல, தாழ்மையான, சமாதானமான வாழ்க்கை மூலமே வெளிப்படுத்த வேண்டும்.

### 4. கிறிஸ்துவை அறிதல் (Knowing Christ):

"கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம் பரிசுத்தமுள்ளவரை அறிகிற அறிவே புத்தி" (நீதி. 9:10).

மெய்ஞானத்தின் ஆரம்பமும் நிறைவும் கிறிஸ்துவை அறிதலே. வெறும் கோட்பாடுகளை மனனம் செய்வதைவிட, அவருடன் நாள்தோறும் நெருங்கிய உறவில் நடப்பதே ஞானமுள்ள வாழ்க்கையின் அடிப்படை.

### 5. ஞானத்தை மற்றவர்களுடன் பகிர்தல் (Sharing with Others):

நாம் பெற்ற இந்த ஞானம் நமக்கு மட்டும் சொந்தமானதல்ல. "நீங்கள் இலவசமாய்ப் பெற்றீர்கள், இலவசமாய்க் கொடுங்கள்" (மத்தேயு 10:8) என்ற கொள்கை ஞானத்திற்கும் பொருந்தும்.

நம் பிள்ளைகள், சபை இளைஞர்கள் மற்றும் நம்மைச் சார்ந்தவர்களுக்கு வாழ்க்கையாலும் வார்த்தைகளாலும் தேவனுடைய ஞானத்தை கடத்த வேண்டிய பொறுப்பு நமக்கு உண்டு. ஒரு தலைமுறையின் ஞானம் அடுத்த தலைமுறைக்குக் கடத்தப்படாவிட்டால் அது இழந்துபோகும் அபாயம் உண்டு.

### முடிவுரை

ஞானம் என்பது வெறும் ஒரு போதனையோ தத்துவமோ அல்ல, அது ஒரு நபர் - நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து. அவரை அறிவதே மெய்யான ஞானத்தின் ஆரம்பமும் நிறைவுமாகும். நம் வாழ்வின் ஒவ்வொரு முடிவிலும், ஒவ்வொரு அடியிலும், இந்த ஞானத்தில் நடக்க தேவன் நமக்குக் கிருபை அருளுவாராக.

கிறிஸ்துவின் சேவையில்
அருட்திரு. ராஜ் குமார் ஜான் வெஸ்லி
ஆயர், தமிழ் திருச்சபை, ∴புஜைரா

# ஆயரம்மா மடல்

## வேதத்தில் பெண்கள்-18

**நிறுவனங்கள் தோல்வியுறும்போது சாட்சிகளாக நிற்கும் பெண்கள்**

அமைப்புகள் சரிந்து விழும்போது, பெண்கள் நிலைத்து நிற்கிறார்கள், அவர்களின் இருப்பே சாட்சியமாக மாறுகிறது.

### 1. உயிர்த்தெழுதலின் பெண் சாட்சிகள்

லூக்கா 24:1-11, மாற்கு 16:1-8, யோவான் 20:1-18

வாரத்தின் முதல் நாள் அதிகாலையில், மகதலேனா மரியாள், யோவன்னாள், யாக்கோபின் தாய் மரியாள் மற்றும் பிற பெண்கள் இயேசுவின் கல்லறைக்குச் சென்றனர். கல்லறை காலியாக இருப்பதையும் உயிர்த்தெழுதலின் செய்தியையும் அவர்கள் முதலில் கண்டனர். அவர்கள் திரும்பிச் சென்று அப்போஸ்தலர்களிடம் அறிவித்தனர்.

ஆனால் அவர்களின் வார்த்தைகள் “வீண்பேச்சு” எனக் கருதப்பட்டு நம்பப்படவில்லை (லூக். 24:10-11). அக்கால சமூக-நீதித்துறை சூழலில் பெண்களின் சாட்சியம் குறைவாக மதிக்கப்பட்டபோதும், கிறிஸ்தவ விசுவாசத்தின் மையமான உயிர்த்தெழுதலுக்கான முதல் சாட்சிகளாக தேவன் அவர்களையே தேர்ந்தெடுத்தார்.

மனிதர்கள் அவர்களின் குரலை நிராகரித்தார்கள் தேவன் அவர்களை முதலில் அனுப்பினார். நிறுவனம் நிராகரித்த சாட்சியம், நித்திய சத்தியமாக நிலைத்தது.

### 2. ஏழை விதவை - சிறு காசுகளால் நிறுவனத்தை நியாயந்தீர்த்தவள்

மாற்கு 12:38-44, லூக்கா 21:1-4

இயேசு ஆலயத்தில் காணிக்கை செலுத்துவதைப் பார்த்துக் கொண்டிருந்தார். செல்வந்தர்கள் அதிகமாகக் கொடுத்தபோது, ஒரு ஏழை விதவை இரண்டு சிறு காசுகளைப் போட்டாள். அதற்கு முன்பே இயேசு, “விதவைகளின் வீடுகளை விழுங்கி” பாசாங்காக ஜெபிக்கும் வேதபாரகர்களைக் கண்டித்திருந்தார் (மாற். 12:40).

அவளது இரண்டு காசுகளும் அவளுடைய முழு வாழ்வாதாரம். இயேசு அவளைச் சீஷர்களுக்கு முன் சுட்டிக்காட்டி, அவள் எல்லாரிலும் அதிகமாகப் போட்டாள் என்றார் (மாற். 12:43-44). அவள் ஒரு வார்த்தையும் பேசவில்லை ஆனால் அவளுடைய காணிக்கை அமைப்பின் உண்மையான நிலையை வெளிப்படுத்தியது.

#### ஏழை விதவையின் சாட்சியத்தின் இறையியல்

இந்த விதவை ஒரு குரல் எழுப்பவில்லை இருந்தும் இயேசு அவளைத் தம் சீஷர்களுக்குக் காட்டினார். அமைப்பு பாதுகாப்பற்றவர்களிடமிருந்து அனைத்தையும் எடுத்துக்கொள்ளும் போது, தேவன் அதை கவனிக்கிறார். அவளுடைய அமைதியான காணிக்கை, ஆலய அமைப்பின் தோல்விக்கு எதிரான சாட்சியாக மாறியது.

இங்கு முக்கியமானது தொகையின் அளவு அல்ல, அர்ப்பணிப்பின் ஆழம். மனிதர்களின் பார்வையில் சிறியது, தேவனுடைய பார்வையில் மிகப் பெரிய சாட்சியாக மாறியது.

### 3. விடாமுயற்சியுள்ள விதவை - நீதி மறுக்கப்பட்டபோது ஓயாமல் கேட்டவள் லூக்கா 18:1-8

இயேசு தம் சீஷர்கள் சோர்ந்துபோகாமல் எப்போதும் ஜெபிக்க வேண்டும் என்பதற்காக இந்த உவமையைச் சொன்னார். ஒரு பட்டணத்தில் தேவனுக்குப் பயப்படாத, மனுஷரையும் மதியாத நியாயாதிபதி இருந்தான். அந்தப் பட்டணத்திலிருந்த ஒரு விதவை, “என் எதிராளியிடத்திலிருந்து எனக்கு நியாயம் செய்யவேண்டும்” என்று மீண்டும் மீண்டும் கேட்டாள்.

அவளுக்கு அதிகாரமும் செல்வாக்கும் குடும்ப ஆதரவும் இல்லை. ஆனால் அவளுடைய ஓயாத வருகை இறுதியில் அநியாய நியாயாதிபதியையே செயல்பட வைத்தது.

இயேசு கூறுகிறார்: “அந்தப்படியே தேவன் தம்மை நோக்கி இரவும் பகலும் கூப்பிடுகிறவர்களாகிய தம்மால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் விஷயத்தில்... நியாயஞ்செய்யாமலிருப்பாரோ?” (லூக். 18:7).

இந்த உவமையின் நியாயாதிபதி, அதிகாரம் இருந்தும் கடமையை நிறைவேற்ற மறுக்கும் நிறுவனத் தோல்வியை பிரதிநிதித்துவப் படுத்துகிறான். விதவையின் ஒரே வலிமை விடாமுயற்சி. அவளுடைய நிலைத்திருத்தல், நீதிக்கான சாட்சியாக மாறியது.

“மனுஷகுமாரன் வரும்போது பூமியிலே விசுவாசத்தைக் காண்பாரோ?”
விடாமுயற்சியுள்ள விதவையின் நம்பிக்கை, நிறுவனங்கள் தோல்வியுறும் ஒவ்வொரு தலைமுறைக்கும் ஒரு கேள்வியை எழுப்புகிறது: சூழ்நிலைகள் மாறாவிட்டாலும், நாம் விசுவாசத்தில் நிலைத்திருக்கிறோமா?

## பெண்களின் சாட்சியம்: ஒரு பொதுவான கரு

உயிர்த்தெழுதலின் பெண் சாட்சிகள், ஏழை விதவை, விடாமுயற்சியுள்ள விதவை - வெவ்வேறு சூழல்களில் இருந்தாலும், ஒரே உண்மையை வெளிப்படுத்துகின்றனர்: அதிகாரம் இல்லாதவர்களாகக் கருதப்பட்ட பெண்களின் இருப்பையும் விசுவாசத்தையும் தேவன் சாட்சியாக்குகிறார்.

## தொடரும் சாட்சியத்தின் இறையியல்

### 1. சாட்சியம் என்பது அதிகாரத்தைப் பெறுவது மட்டுமல்ல

இந்தப் பெண்கள் நிறுவனங்களைத் தாங்களே கைப்பற்றவில்லை. அவர்கள் அதிகாரப் பதவிகளைத் தேடவில்லை. ஆனால் தங்கள் இருப்பு, விசுவாசம், உண்மைத்துவம் மற்றும் விடாமுயற்சியால் சத்தியத்தை உயிரோடு வைத்தனர்.

## 2. சாட்சியம் என்பது நிலைத்திருத்தல்

சாட்சியத்தின் இறையியல் என்பது வெற்றியின் இறையியல் மட்டுமல்ல, அது நிலைத்திருத்தலின் இறையியல். நிராகரிப்பு, புறக்கணிப்பு, வறுமை அல்லது அநீதி வந்தாலும், சத்தியத்தை விட்டுவிடாமல் நிற்பதே சாட்சியம்.

உயிர்த்தெழுதலின் செய்தியை நம்பாதவர்கள் இருந்தபோதும் பெண்கள் அதை அறிவித்தனர். ஆலயத்தில் யாரும் கவனிக்காத விதவை தன் காணிக்கையைச் செலுத்தினாள். அநியாய நியாயாதிபதி மறுத்தபோதும் விதவை மீண்டும் மீண்டும் கேட்டாள்.

## 3. தேவன் மனித நிறுவனங்களைக் காட்டிலும் ஆழமாகக் காண்கிறார்

மனிதர்கள் மதிப்பிடாத சாட்சிகளை தேவன் மதிக்கிறார். மனிதர்களின் பார்வையில் ஒரு பெண்ணின் குரல் சிறியதாக இருக்கலாம். ஆனால் தேவனுடைய திட்டத்தில் அது நித்திய சத்தியத்தை அறிவிக்கும் குரலாக மாறலாம்.

அமைப்புகள் தோல்வியடையும்போது, தேவன் சாட்சியைத் தொடர்ந்து எழுப்புகிறார். சில நேரங்களில் அது பெரிய அதிகாரத்தின் மூலம் அல்ல, அமைதியான விசுவாசத்தின் மூலமாக வருகிறது.

## 4. இன்றைய சபைக்கும் சமூகத்திற்குமான அழைப்பு

நிறுவனங்கள் இன்றும் குடும்பங்களில், நீதித்துறைகளில், சபைகளில், அரசாங்கங்களில் தோல்வியடையலாம். ஆனால் அத்தகைய சூழலில் தேவனுடைய மக்கள் அநீதியை சாதாரணமாக ஏற்றுக்கொள்ளக் கூடாது.
பெண்களின் இந்தச் சாட்சிகள் நம்மை மூன்று காரியங்களுக்கு அழைக்கின்றன:

- உண்மையைப் பேசுங்கள் -
  உங்கள் குரல் சிறியது என்று நினைக்காதீர்கள்.
- விசுவாசத்தில் நிலைத்திருங்கள் -
  உடனடி மாற்றம் இல்லாவிட்டாலும் சோர்ந்துபோகாதீர்கள்.
- தேவனை நம்புங்கள் -
  மனித அமைப்புகள் தோல்வியுற்றாலும்,
  தேவனுடைய பார்வையும் நீதியும் தோல்வியுறாது.

## முடிவுரை

இந்தப் பெண்கள் நமக்குக் கற்றுத்தருவது: சாட்சியாக இருப்பது என்பது எப்போதும் வெற்றி பெறுவது அல்ல் சத்தியத்தில் நிலைத்திருப்பதாகும். தேவன் காண்கிறார், நினைவுகூர்கிறார், நியாயந்தீர்க்கிறார்.

**“தேவன் காண்கிறார், நினைவுகூர்கிறார், நியாயந்தீர்க்கிறார்,
ஆகையால் நிலைத்து நில்லுங்கள்.”**

கிறிஸ்துவின் சேவையில்
திருமதி பாலின் எமிமா
ஆயரம்மா, தமிழ் திருச்சபை, ∴புஜைரா

## இராஸ் அல் கைமா போதகர் மடல்

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே,

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் இராஸ் அல் கைமா திருச்சபையின் சார்பாக உங்களை அன்புடன் வாழ்த்துகிறேன். கடந்த மாதங்களில் கர்த்தர் நம்மோடிருந்து நம்மைப் பெலப்படுத்தி, சுகம் தந்து, நம்முடைய பிரயாணங்களில் நம்மோடிருந்து நம்மைக் காத்து வழிநடத்தியதற்காய் ஆண்டவருக்கு நன்றி செலுத்துவோம், தொடர்ந்து இப்புதிய மாதத்திலும் கர்த்தர் நம்மைத் தாங்கி வழிநடத்துவாராக.

**"ஒருவனை அவன் தாய் தேற்றுவதுபோல் நான் உங்களைத் தேற்றுவேன், நீங்கள் எருசலேமிலே தேற்றப்படுவீர்கள்."**
**ஏசாயா 66:13**

தேற்றுதல் என்பது மனித வாழ்வில் மிக அவசியமான ஒன்றாகும். துன்பம், இழப்பு, தோல்வி, வியாதி, மன அழுத்தம் என பல்வேறு காரியங்கள் நம்மை பாதிக்கின்றபோது, உலகத்தில் பலர் நமக்கு ஆறுதல் கூறினாலும், உண்மையான மற்றும் நிரந்தரமான தேற்றுதலை (True and Permanent Comfort) கர்த்தர் மட்டுமே நமக்குத் தரமுடியும். இயேசு யோவான் 14:27-ல் "என்னுடைய சமாதானத்தை உங்களுக்கு கொடுக்கிறேன், உலகம் கொடுக்கிற பிரகாரம் நான் உங்களுக்கு கொடுக்கிறதில்லை" என்று கூறுகிறார். நமது வாழ்வில் நாம் கடந்து வருகிற சூழல்களில் கர்த்தர் நம்முடன் இருந்து நம்மைத் தேற்றி பெலப்படுத்தி பயன்படுத்துகிறார். கர்த்தர் கொடுக்கிற தேற்றுதல் உலக பிரகாரமாக மட்டுமல்லாமல், ஆவிக்குரிய ரீதியாக நம்மை பெலப்படுத்துகிறது.

தேவனாகிய கர்த்தர் எலியா தீர்க்கதரிசியின் வாழ்வில் எப்படி அவரைத் தேற்றிப் பெலப்படுத்தினார் என்பதை அறிந்து நாமும் கர்த்தர் மூலம் தேற்றுதலையும், பெலனையும் பெற்றுக் கொள்வோம். கர்த்தருக்காக வைராக்கியமாய் செயல்பட்ட எலியா தீர்க்கன் யேசபேலுக்கு பயந்து வனாந்தரத்தில் ஒளிந்து இருக்கின்றபோது. "போதும் கர்த்தாவே, என் ஆத்துமாவை எடுத்துக் கொள்ளும்" என்று அங்கலாய்க்கிறார். எனக்கு ஏன் இந்த சூழ்நிலை என புலம்புகிறார். அப்படிப்பட்ட சூழ்நிலையில் கர்த்தர் எலியாவைச் சந்தித்து அவரை சரீரப்பிரகாரமாக போஷித்து, ஆவிக்குரிய தேற்றுதலையும் பெலனையும் கொடுக்கிறார்.

## தேவன் நம்மைத் தேற்றும் வழிகள்:

### 1. தனிமைப்படுத்தி தேற்றுகிறார்

இங்கு எலியா தீர்க்கன் தனிமைப்படுத்தப்பட்ட நிலையில் உள்ளார். நான் ஒருவன் மாத்திரம் இஸ்ரவேலிலே மீதியாயிருக்கிறேன் (1இராஜா.19:10) என கூறுகிறார். ஏன் இப்படி தனிமைப்படுத்தப்பட்ட நிலை என அங்கலாய்க்கிறார். சில சூழ்நிலைகளில் கர்த்தர் நம்மை தனிமைப்படுத்துகிறார். கர்த்தர் நம்மை கைவிட்டதைப் போல் தெரியலாம். எல்லாரும் இருந்தும் யாரும் நம்முடன் இல்லாததைப்போல உணரலாம். ஆனால் கர்த்தர் நம்மை உருவாக்கும் படியாகவும், நமது சுயத்திலிருந்து நம்மை விடுதலையாக்கி, கர்த்தருடைய பெலத்தினால் தேற்றி பயன்படுத்தும்படி, ஆண்டவர் நம்மை சில பாதைகளில் வழிநடத்துகிறார். தனிமையாயிருக்கையில் நமக்கு கற்றுக் கொடுத்து, நம்மைத் தேற்றுகிறார்.

### 2. தனித்துவமாக தேற்றுகிறார்

இங்கு எலியாவின் இந்த சூழல் கர்த்தரின் தனித்துவமான சத்தத்தைக் கேட்க உதவியது. பெருங்காற்று, பூமி அதிர்ச்சி, அக்கினி போன்றவற்றில் பேசாமல் அமர்ந்து மெல்லிய சத்தத்தில் எலியாவோடு பேசுகிறார். யாருக்கும் வெளிப்படாத மெல்லிய சத்தத்தின் மூலம் தேவன் எலியாவைத் தேற்றுகிறார். கர்த்தர் நமக்குத் தருகிற தேற்றுதல் எல்லாரைப்போல சாதாரணமாக இல்லாமல், தனித்துவமாக இருக்கிறது. தமது வார்த்தைகளால் நம்மைத் தேற்றுகிறார். கர்த்தர் நம்மை ஒரு பாதையில் நடத்தினாலும், அதில் ஒரு நோக்கமிருக்கும். தனித்துவமான கர்த்தரின் அனுபவத்தை நாம் அதில் பெற்றுக் கொள்ள முடியும். அந்த தேற்றுதலின் மூலம் கர்த்தரிடத்தில் நாம் இன்னும் நெருங்கி சேரமுடியும்.

### 3. தரிசனம் தந்து தேற்றுகிறார்

கர்த்தர் நம்மைச் சந்தித்து தேற்றுகிற போது அந்த தேற்றுதல் நமக்கானதாக மட்டுமல்லாது, நம்மை அநேகருக்கு ஆசீர்வாதாக பயன்படுத்துகிறதாகவும் இருக்கும். கடினமான பாதையில் கர்த்தர் நம்மை நடத்தினால் அதில் கர்த்தரின் பெரிய தரிசனம் இருக்கும். கர்த்தர் நம்முடன் இடைப்பட்டு தேற்றி, பயன்படுத்தும் போது தான் நாம் அதை உணரமுடியும். இங்கு எலியாவின் இந்த அனுபவம் தொடர்ந்து எலிசாவையும், ஆசகேலையும் அபிஷேகம் பண்ண வழிநடத்துகிறது.

அன்பானவர்களே, கர்த்தர் நம்மைச் சந்தித்து தேற்றுகிறார். கர்த்தரின் தேற்றுதல் தனிமையில் வெளிப்படுகிறது, தனித்துவமாக வெளிப்படுகிறது, தரிசனத்தை தந்து நம்மைப் பயன்படுத்துகிறது. ஆமென்.

கிறிஸ்துவின் பணியில்
அருட்திரு. D.ஜோசப்
ஆயர், இராஸ் அல் கைமா.

# ஆயரம்மா மடல்

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே,

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு அன்பின் வாழ்த்துக்கள். இப்புதிய மாதத்திலும் ஆண்டவராகிய கர்த்தர் நம்மை வழிநடத்துவாராக. இம்மாதத்திலும் வேதாகமத்தில் ஆளுகைமிக்க பெண் தலைவரான தெபொராளின் வாழ்வைப் பற்றி அறிந்து நமது வாழ்விலும் சிறந்த ஆளுமை மிக்கத் தலைவர்களாக வாழ்வதற்கு கர்த்தர் உதவி செய்வாராக.

## அஞ்சாத பெண் ஆளுமை

நியாயாதிபதி **தெபொராள் (Deborah)** என்பவர், வெறும் வரலாற்றுப் பாத்திரம் மட்டுமல்ல, அவர் பெண் தலைமைத்துவத்தின், துணிவின், மற்றும் ஞானத்தின் ஒரு நித்தியச் சின்னம். ஒரு காலகட்டத்தில், பெண்கள் அதிகாரப் பதவிகளை வகிப்பது அரிதாக இருந்தபோது, தெபொராள் ஒரு தீர்க்கதரிசியாகவும் (Prophetess), நீதிபதியாகவும், இராணுவ ஆலோசகராகவும் செயல்பட்டார். கானானியரின் கொடுங்கோன்மைக்கு எதிராக இஸ்ரவேல் மௌனம் காத்தபோது, ஒரு பெண்ணாக எழுந்து நின்றார். அவருடைய அஞ்சாத ஆளுமையின் வலிமை, தனிப்பட்ட வாழ்வு, குடும்பம், சமூகம், மற்றும் தொழில் ஆகிய வாழ்வின் நான்கு முக்கியத் தூண்களிலும் (Four Pillars of Life) வெற்றிகரமாகச் செயல்பட முடியும் என்று நிரூபித்தது.

### 1. முடிவெடுக்கும் திறன் மற்றும் முன்னோக்கிய பார்வை (Decision-Making and Future Vision)

தெபொராளின் ஆளுமையின் அடிப்படை, அவருடைய முடிவெடுக்கும் திறன் (Decision-Making Ability). அவர் வழக்குகளை விசாரித்தார் (நியாயாதிபதிகள் 4:5). ஒரு தலைவர் என்ற முறையில், அவர் உணர்ச்சிவசப்படாமல், நிதானத்துடனும் நீதியுடனும் தீர்வுகளை வழங்கினார். இது தனிப்பட்ட வாழ்க்கையில் குழப்பமான சூழ்நிலைகளில் சரியானதைத் தேர்ந்தெடுப்பதற்கும், தொழில் ரீதியாக நிறுவனத்தின் நீண்டகால நலனுக்கான முடிவுகளை எடுப்பதற்கும் அவசியமாகிறது.

அவருடைய முன்னோக்கிய பார்வை (Future Vision), உடனடித் தோல்விகளைக் கண்டு அஞ்சாமல், இறுதி விடுதலையின் (Ultimate Liberation) மீது அவர் வைத்திருந்த நம்பிக்கையைக் காட்டுகிறது.

மாணவர்கள் குறுகிய காலத் தேர்வுகளில் மட்டும் கவனம் செலுத்தாமல், ஒட்டுமொத்த கல்வி இலக்கை அடைவதற்கான நீண்டகாலத் திட்டங்களை வகுக்கவும் நிறுவனங்கள் தற்போதைய சந்தைச் சவால்களைத் தாண்டி எதிர்காலத்தை நோக்கிச் செல்லவும் இந்தத் தொலைநோக்குப் பார்வை உதவுகிறது.

## 2. துணிவு மற்றும் தன்னம்பிக்கை (Courage and Self-Confidence)

தெபொராளின் துணிவு, அவரைப் போர்க்களத்திற்குக் கொண்டு சென்றது (நியாயாதிபதிகள் 4:9). தளபதி பாராக் தயங்கியபோதும், "நான் உன்னுடன் நிச்சயம் வருவேன்" என்று அவர் கூறியது அவரது அசைக்க முடியாத தன்னம்பிக்கையைக் (Self-Confidence) காட்டுகிறது.

சமூகத் துறையில், அநீதியான நடைமுறைகளுக்கு எதிராக குரல் கொடுக்கவும் (Speaking Up Against Injustice), சமூக நிராகரிப்பைப் பற்றிக் கவலைப்படாமல் சரியானதைச் செய்யவும் இந்தத் துணிவு தேவைப்படுகிறது.

தொழில் அல்லது கல்வித் துறையில், புதிய மற்றும் அபாயகரமான யோசனைகளை (Risky Ideas) முன்வைக்கவும், விமர்சனங்களை எதிர்கொள்ளவும் இந்தத் தைரியமான அணுகுமுறை (Bold Approach) அவசியமாகிறது. துணிச்சல் என்பது பயம் இல்லாதது அல்ல் பயம் இருந்தும் இலக்கை நோக்கிச் செயல்படுவது.

## 3. தலைமைத்துவ பங்கு & குழு ஒருங்கிணைப்பு (Leadership Role & Team Coordination)

தெபொராள் ஒரு நிர்வாகியாக மட்டுமல்ல, ஒரு சிறந்த தலைவர் (Leader) ஆகவும் செயல்பட்டார். அவர் அதிகார மையத்தில் இருந்தபோதுகூட, பாராக்கையும், மற்ற இஸ்ரவேல் கோத்திரங்களையும் (நியாயாதிபதிகள் 4:10) ஒன்றிணைக்கும் ஆற்றலைக் கொண்டிருந்தார். இது அவரது குழு ஒருங்கிணைப்புத் திறனைக் (Team Coordination) காட்டுகிறது.

குடும்பச் சூழலில், ஒரு தலைவர் என்பது அதிகாரத்தைச் செலுத்துபவர் அல்ல, மாறாகக் குடும்பத்தின் இலக்குகளை நோக்கி அனைவரையும் இணைத்துச் செல்பவர்.

தொழில் துறையில், ஒரு நல்ல தலைவர் என்பவர், ஒவ்வொரு குழு உறுப்பினரின் தனித்திறமைகளையும் (Unique Talents) அடையாளம் கண்டு, அவர்களைச் சரியான இடத்தில் பயன்படுத்தி, கூட்டு வெற்றியைக் (Collective Success) கொண்டு வருபவரே. தெபொராள் தன் குழுவில் உள்ள அனைவரின் பங்களிப்பையும் உறுதி செய்தார்.

### 4. சமூக அக்கறை & தாழ்மையான நன்றியுணர்வு (Social Concern & Humble Gratitude)

தெபொராள், “நான் இஸ்ரவேலுக்குத் தாயாக எழும்பினேன்” (நியா. 5:7) என்று பாடினார். இது அவரது சமூக அக்கறையின் (Social Concern) ஆழத்தைக் காட்டுகிறது. அவருடைய தலைமைத்துவம் என்பது அதிகாரத்தை நிலைநாட்டுவது அல்ல, மாறாக, தன் தேசத்தைப் பாதுகாப்பது மற்றும் பராமரிப்பது (Protecting and Nurturing) என்ற தாயுள்ளத்தின் வெளிப்பாடு. இது ஒரு தலைவர் தனது குழுவின் அல்லது சமூகத்தின் நலனைத் தன் சொந்த இலாபத்தை விட உயர்வாகக் கருதுவதைக் குறிக்கிறது.

வெற்றிக்குப் பிறகு, அவர் பாடிய துதிப்பாடல் (நியா. 5:1), அவருடைய நன்றியுணர்வு மற்றும் தாழ்மையைக் (Gratitude & Humility) காட்டுகிறது. தனது சாதனைகளுக்காகத் தனக்கு மட்டுமே பெருமை தேடாமல், அனைத்து மகிமையையும் மூல காரணத்திற்குக் (Root Cause) கொடுத்தார். இது, நாம் அடையும் வெற்றிகளை, அதற்குக் காரணமாக இருந்த மற்றவர்கள், வாய்ப்புகள், அல்லது சக்திகளுக்கு நன்றி தெரிவித்து, தன்னடக்கத்துடன் (Modestly) செயல்படக் கற்றுக் கொடுக்கிறது.

அன்பானவர்களே, தெபொராளின் ஆளுமைப் பண்புகள் ஒரு சிறந்த மனிதநேயமிக்கத் தலைவரைப் (Humanistic Leader) படம்பிடித்துக் காட்டுகின்றன. ஒரு பெண்ணாக இருந்தபோதிலும், அவர் தனது ஞானம், துணிவு மற்றும் விசுவாசம் மூலமாக, ஒரு தேசத்தின் தலைவிதியை மாற்றியமைத்தார். அவருடைய ஒவ்வொரு குணமும் நாம் வாழும் உலகின் பல்வேறு பொறுப்புகளில் எவ்வாறு திறமையாகவும் நேர்மையாகவும் (Competently and Ethically) செயல்பட முடியும் என்பதைக் காட்டுகிறது. அவருடைய வாழ்க்கை, உண்மையான வலிமை என்பது பதவியில் இல்லை, மாறாக பாலின எல்லைகளைக் (Gender Barriers) கடந்து, ஞானத்துடனும் தைரியத்துடனும் மற்றவர்களுக்குச் சேவை செய்வதில் இருக்கிறது என்பதை நிரூபிக்கும் ஒரு நித்திய சான்றாகும். நாமும் தெபொராளைப் போல செயல்பட தேவ சமூகத்தில் காத்திருப்போம். ஆண்டவர் தாமே நம்மை ஆசீர்வதிப்பாராக.

திருமதி. P. அன்பு வனிதா ஜோசப்
ஆயரம்மா - இராஸ் அல் கைமா.

# செயலர் மடல்

அன்பின் சொரூபியாம் அருமை இரட்சகர் இயேசு கிறிஸ்துவின் மேலான நாமத்தில் உங்கள் ஒவ்வொருவரையும் வாழ்த்துகிறேன். கடந்த இரண்டு மாதங்களிலும் கர்த்தரின் மேலான தயவும், கிருபையும், இரக்கமும் நமது திருச்சபைகளின் ஆராதனைகளிலும் நம்மோடு இருந்ததற்காக நன்றியோடு கர்த்தரைத் துதிக்கிறேன். விடுமுறைக் காலங்களில் வெளிநாடுகளுக்கும் தாயகத்திற்கும் சென்று திரும்பிய யாவருக்காகவும் கர்த்தரைத் துதிக்கிறேன்.

கடந்த இரண்டு மாதங்களிலும் நடைபெற்ற திருவிருந்து ஆராதனைகள், காலை மாலை ஆராதனைகள், எல்லாவிதமான ஊழியங்கள், உபவாச ஊழியங்கள், ஆண்கள் பெண்கள் ஐக்கியச் சங்கங்கள், ஜெபக் கூட்டங்கள், பிரேயர் செல் ஊழியங்கள், சம்மர் கேம்ப் ஊழியங்கள் ஒவ்வொன்றும் ஆசீர்வாதமாக நடைபெற, கர்த்தர் கிருபை பாராட்டினார். தேவாதி தேவனுக்குத் துதியும் மகிமையும் செலுத்துகிறேன்.

நமது திருச்சபையின் வருடாந்திர ஸ்தோத்திரப் பண்டிகை ஆராதனை வருகிற நவம்பர் மாதம் நடைபெற இருப்பதால், ஒவ்வொரு வாரமும் பிரேயர் செல் மற்றும் other ministries சார்பாக முறையாக Weekly Food Sale நடைபெற்று வருவதற்காக ஒத்துழைப்பு தரும் யாவருக்காகவும் கர்த்தருக்கு நன்றி செலுத்துகிறேன். Prayer Cell மற்றும் other ministries அங்கத்தினர்களையும், பொறுப்பாளர்களையும் பாராட்டுகிறேன்.

HTC ஆலயத்தில் வெள்ளிக்கிழமைகளிலும், Jebel Ali Christ Church ஆலயத்தில் சனிக்கிழமைகளிலும், மாலை 7:00 மணி முதல் 8:30 மணி வரை நடைபெறும் ஆராதனைகளுக்காகவும், Sing Song ஆராதனைகளுக்காகவும், அவற்றில் கலந்து கொள்ளும் ஒவ்வொருவருக்காகவும் நன்றி செலுத்துகிறேன்.

நமது கிளைச் சபைகளான ஃபுஜைரா மற்றும் ராஸ் அல் கைமா சபைகளில் நடைபெற்று வரும் ஆராதனைகள் மற்றும் அனைத்து ஊழியங்களுக்காகவும் தேவாதி தேவனுக்கு மகிமையும் துதியும் செலுத்துகிறேன். கிளைச் சபைகளின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக அர்ப்பணிப்புடன் உழைத்து வரும் அருமையான போதகர்களையும், செயற்குழு அங்கத்தினர்களையும் அவர்களுடைய சேவைக்காக நன்றியுடன் பாராட்டுகிறேன்.

தூதன் புத்தகம் மூலம் பல்வேறு விதங்களில் தேவனுடைய வார்த்தைகளையும், ஆவிக்குரிய சிந்தனைகளையும், Children's Corner, வேதாகம வினாடி வினா மற்றும் பல்வேறு பதிவுகள் மூலம் பகிர்ந்துகொள்வதில் பங்குபெறும் யாவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தூதன் புத்தகத்தை வெளியிடுவதில் பல்வேறு விதங்களில் பங்கேற்கும் ஒவ்வொருவரையும் கர்த்தர் தாமே நினைவுகூர்ந்து, ஆசீர்வதித்து, தொடர்ந்து பயன்படுத்துவாராக.

விடுமுறைக் காலங்களில் சம்மர் கேம்ப் மூலம் 'Shipwrecked' என்ற கருப்பொருளில் மிகவும் சிறப்பாக Miss. Bibisha Sharon Bright அவர்கள் பொறுப்பாளராக இருந்து நடத்தினார்கள். அவர்களுக்கும், அவர்களுடன் ஆசிரியர்களாகவும், Summer Camp Volunteers ஆகவும் மேலும் பல்வேறு விதங்களில் ஒத்துழைப்பு தந்த யாவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தங்கள் பிள்ளைகளைத் தவறாமல் அனுப்பிவைத்த பெற்றோர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

Ras Al Khaimah ஆலயத்திலும் Summer Camp ஊழியம் நடைபெற கர்த்தர் கிருபை செய்தார். அதற்காக தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறேன்.

ஜூலை 4ஆம் தேதியன்று, 47வது ஆண்டு பொதுக்குழுக் கூட்டத்தின் கூட்டக் குறிப்புகள் (Minutes of Meeting) மற்றும் 2026-2027ஆம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட முன் அறிவிப்பு ஆகியவை சபை அங்கத்தினர்களின் பார்வைக்காக இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டன.

ஜூலை 26ஆம் தேதி திருமண ஞாயிறு (Marriage Sunday) ஆராதனை நடைபெற்றது. கோயம்புத்தூர் திருமண்டல ஓய்வு பெற்ற பேராயர் Rt. Rev. Timothy Ravinder அவர்கள் ஆராதனையில் கலந்துகொண்டு, திருமண ஞாயிறு சிறப்பு நிகழ்வில் தேவசெய்தி வழங்கினார். பிஷப்பம்மா அவர்களும் ஆராதனையில் கலந்துகொண்டார்கள். திருமணமான அனைத்து தம்பதிகளும் சிறப்பு ஜெபத்திற்காகப் பலிபீடத்திற்கு அழைக்கப்பட்டனர்.

ஜூலை 27ஆம் தேதி, ஆயர் மற்றும் சபை நிர்வாகப் பொறுப்பாளர்கள் (Office Bearers), CSI CKD-யின் புதிய குழு உறுப்பினர்களைச் சந்தித்து, சபை நிலம் மற்றும் உரிமம் (Licensing) தொடர்பான விஷயங்கள் குறித்து கலந்துரையாடினர்.

ஈரான் போர் நெருக்கடியின் காரணமாக விதிக்கப்பட்டிருந்த ஆராதனைக்கான கட்டுப்பாட்டை ஆகஸ்ட் 3ஆம் தேதி CDA தளர்த்தி, முழுக் கொள்ளளவில் ஆராதனை நடத்த அனுமதி வழங்கியது. நமது ஜெபங்களைக் கேட்ட இறைவனுக்கு நன்றி செலுத்துகிறோம்.

ஆகஸ்ட் 9, 2026 ஞாயிற்றுக்கிழமை, ஆராதனை சுதந்திர தின சிறப்பு ஆராதனையாகக் கொண்டாடப்பட்டது. Holy Trinity Church Chaplain Rev. Canon Prem Mitra அவர்கள் ஆராதனையில் கலந்துகொண்டு தேவசெய்தி வழங்கினார். Anglican Church of Cyprus & Gulf மூலம் Rev. Canon Prem Mitra அவர்களுக்கு வழங்கப்பட்ட 'Canon' பட்டத்திற்காக, சபை சார்பாக சபை மூப்பர்களான நமது திரு. துரைராஜ், திருமதி ஐரின் ஜெயசீலன் மற்றும் டாக்டர் பெஞ்சமின் ஆகியோர் அவரைக் கௌரவித்தனர்.

ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களின் நான்காவது ஞாயிற்றுக்கிழமைகளில், காலை 6:45 மணிக்கு முறையே EC குடும்பங்கள் மற்றும் Labour Camp Ministries சார்பில் துதி மற்றும் ஆராதனைப் பாடல்கள் பாடப்பட்டன. அதற்காக தேவாதி தேவனுக்குத் துதியும் மகிமையும் செலுத்துகிறேன்.

செப்டம்பர் 6-ஆம் தேதி, JC, Cornerstone மற்றும் தமிழ் வகுப்புகள் ஆரம்பமாகும். Junior Church வேதாகம மனப்பாட வசனப் போட்டி செப்டம்பர் 27ஆம் தேதியன்று நடைபெறும்.

கடந்த ஏழு ஆண்டுகளாக சோனாப்பூர் லேபர் கேம்ப் ஊழியம் போதுமான உள் அரங்க வசதி இல்லாததால், திறந்தவெளியில் ஆராதனைகளை நடத்தி வந்தது. Sonapur Labour Camp Ministry ஜெப ஆராதனைகளுக்காகப் புதிய உள் அரங்கம் (Indoor Space) கண்டறியப்பட்டுள்ளது. இதன் காரணமாக, ஆராதனை நாள் சனிக்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமைக்கு மாற்றப்பட்டுள்ளது.

தற்போது ஜெபல் அலி பகுதியிலுள்ள லேபர் கேம்ப் ஊழியத்திலும் உள் அரங்க வசதி இல்லாத காரணத்தால், திறந்தவெளியில் ஜெப ஆராதனைகள் நடத்தப்பட்டு வருகின்றன. உள் அரங்கத்திற்கான இடத்தைக் கண்டறிய EC தீவிரமாக முயற்சி செய்து வருகிறது. இதற்காக அனைவரும் தொடர்ந்து ஜெபிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

CDA அனுமதி, சபைப் பதிவு, சபைக்கான வங்கிக் கணக்குத் திறப்பு போன்ற காரியங்கள் யாவும் கர்த்தருடைய கிருபையால் நிறைவேறவும் தொடர்ந்து பாரத்தோடு ஜெபிப்போம். சுற்றியுள்ள சூழ்நிலைகள் சீரடைந்து, அமைதியான நிலை ஏற்படவும், பொருளாதாரச் சூழ்நிலைகள் சீரடையவும், நமது சபைகளின் வளர்ச்சிக்காகவும் ஜெபிப்போம்.

தொடர்ந்து நாம் கர்த்தருக்கு மகிமையுள்ள சாட்சியாக வாழவும், அநேகருக்குச் சாட்சியாக ஜீவிக்கவும் கர்த்தர் கிருபை செய்வாராக. கர்த்தர் தாமே புதிய மாதத்தில் நம் அனைவரோடும் கூடவே இருந்து, தேவைகள் யாவற்றையும் ஏற்ற நேரத்தில் தந்து நடத்துவாராக. ஜெபமே ஜெயம், ஜெபமே ஜீவன்.

கிறிஸ்துவின் பணியில்,

P. பிரகாஷ்

செயலர்

# நீங்கள் கிறிஸ்தவரா...

"அன்றியும் ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது." எபிரேயர் 9:27

அன்பானோரே!
அடுத்த வீட்டுவாசலில்
அழுகை கேட்டால்,
அது அவர்கள் துயரமல்ல,
ஆழ்ந்த வாழ்வின் நிலைமையை,
ஆணித்தரமாக சொல்லும்,
ஆண்டவனின் குரல்...
இன்று அவர்களுக்கு
இனி நாளை நமதே
ஈ.டு காலம் நினைவூட்டும்,
ஈவான உண்மையே அது...
உங்கள் சண்டைகள்
உனக்கான சொத்துக்கள்
உந்தன் புகழோடு, பதவி,
என்றும் சவபெட்டிதனை,
எகிறி வருவதில்லையே!!!
அன்பு இதயங்களே
நிலைக்கும்
ஆண்டவரை நம்பிய
வாழ்வே பலிக்கும்,
இவ்வுலக வாழ்வில்
நன்மை செய்வோம்,
ஈசன் இயேசு சித்தப்படி நடப்போம்
உந்தன் வாழ்கை ஒரு பயணம்
ஊடுருவும் மரணம் ஒரு முடிவல்ல
நம் தேவனை சந்திக்கும் துவக்கம்.
அடுத்த வீட்டுவாசலில்
அழுகை கேட்டால்,
அது நமக்கான ஒரு பாடம்

ஆதலால்... கர்த்தருக்கு...
நன்றி செலுத்துங்கள்...
கர்த்தர் நல்லவர், அவர் கிருபை
என்றென்றைக்கும் உள்ளது."
சங்கீதம் 100:5
பிரியமானவரே!
கடந்த காலங்கள்
காயங்கள் தந்தாலும்-அது
நம்மை அழிக்கவில்லை
வந்த சோதனைகள்-அது
நம்மை உடைக்கவில்லை
நேற்றைய நாளை நினைத்தே
இன்றைய நாளை விட்டுவிடாதே!
ஒரு நிச்சயம் மட்டும் உண்டு
வாய்ப்பை வசப்படுத்திடு
வாழ்வினை வசந்தமாக்கிடு
வாழ்வு தரும் தேவனை நம்பிடு
கர்த்தரின் இரக்கம்
நம்மை உயர்த்தும்
அவரின் வருகை
நம்மை புதுப்பிக்கும்!
அந்த வருகையின் நாளோ..
நம்மை அழைத்து மகிழும் நாள்
கர்த்தர் தரும் சமாதானத்தின் நாள்.
குற்றத்தின் நடுவில் கிருபை,
அழுக்கின் நடுவில் சுத்திகரிப்பு,
தோல்வியின் நடுவில் புதிய
துவக்கம்-
இதுவே தேவனின் அன்பு.

என்றும் அன்புடன், T. ராஜ்குமார். Mens Fellowship.

# திருச்சபை ஜெபநாள் 06-09-2026 (முதல் ஞாயிறு)

"அல்லாமலும், உங்களில் இரண்டு பேர் தாங்கள் வேண்டிக்கொள்ளப்போகிற எந்தக் காரியத்தைக் குறித்தாகிலும் பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால், பரலோகத்தில் இருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்." மத்தேயு 18:19

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, "திருச்சபை ஜெபநாளில்" பங்கு பெற்றுத் தொடர்ந்து ஜெபித்துவரும் ஒவ்வொரு குடும்ப அங்கத்தினர்களுக்கும் சபையின் சார்பில் நன்றி கூறுகின்றோம். தொடர்ந்து மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை தோறும், ஜெபக் குழுக்களிலும் மற்றும் தினந்தோறும் ஜெப நேரம் ஒதுக்கி, ஜெபித்துத் திருச்சபைத் திருப்பணிகளைத் தாங்குங்கள். தேவ ஆசீர்வாதம் உங்களோடிருப்பதாக.

## துதிகள்

- கடந்த மாதம் முழுவதும் ஆண்டவர் அருளிய கிருபைகளுக்காக துதிப்போம்.
- கர்த்தர் நமக்குத் தந்தருளிய சரீர சுகம், பெலன், ஜீவனுக்காக, திருச்சபை மூலமாக நாம் இம்மட்டும் பெற்றுக்கொண்ட ஐக்கியம் மற்றும் ஆன்மீக நன்மைகளுக்காக நன்றி கூறுவோம்.
- நம் பணிகள், தொழில்கள் மற்றும் பிரயாணங்களில் ஆண்டவர் அருளிய பாதுகாப்பிற்காக துதிப்போம்.
- ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதம் அனைத்து ஆராதனைகளும் தடையில்லாமல் நடந்தமைக்காக, Summer Camp சிறப்பாக நடைபெற்றதற்காக துதிப்போம்.
- விடுமுறை நாட்களில் சொந்த ஊர்களுக்குச் சென்று திரும்ப ஆண்டவர் அருளிய கிருபைகளுக்காக துதிப்போம்.

## திருச்சபை திருப்பணிகளுக்கான ஜெப வேண்டுதல்கள்

- நம் குருவானவர்கள், அலுவலக பணியாளர்கள் மற்றும் அவர்களுடைய குடும்பத்தினருக்காக, திருப்பணிகளுக்காக ஜெபிப்போம்.
- நம் திருச்சபையின் முன்னாள் குருவானவர்கள், மற்றும் அவர்கள் குடும்பத்தாருக்காகவும், ஆரோக்கியத்திற்காகவும் ஜெபிப்போம்
- ஃபுஜைரா, இராஸ் அல் கைமா சபைகளின் ஊழியங்களுக்காக, சபை வளர்ச்சிக்காக ஜெபிப்போம்.
